# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண்.243/2004**

**பெயர்:நல்லமுத்து** **நாள்: 01.12.2025**

வா.சா.1 – 1-3 பிரதிவாதிகள் தரப்பில் இடைநிலை மனுவின் மூலம் அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

வா.சா.1 - நல்லமுத்து - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u> : 12:05

நான் இந்த தாவாவை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால், சித்தப்பா காட்டை மற்றொரு பங்காளிகள் விடமாட்டேன் என்று கூறினார்கள் ஆகையால் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன். எந்த எந்த சர்வே எண்களுக்கு இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சர்வே எண் நியாபகம் இல்லை. மொத்தம் எத்தனை ஏக்கர் என்றால், மொத்தம் 13 ஏக்கர் ஆகும். அதன் நான்கு புற சக்குபந்தி தெரியுமா என்றால், தெரியாது. இரத்தினசாமி நாடார் எனக்கு எப்படி பழக்கம் என்றால், என் அம்மாவின் அத்தை மகன் ஆவார். இரத்தினசாமி நாடாருக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால், ஒரு நபர் அவரது பெயர் சித்தன் ஆகும். அவர் இந்த வழக்கின் நான்காவது பிரதிவாதி என்றால், சரிதான். அவர் இறந்துவிட்டார், அவர் இறந்து 4,5 ஆண்டுகள் இருக்கும். ராஜி மற்றும் செல்வம் சித்தனுடைய மகன்கள் என்றால், சரிதான். சபாபதி யார் என்றால், சித்தனுடைய அண்ணன் மகன் ஆவார். சாட்சி

பின்னிட்டு இரத்தினசாமி நாடாருக்கு 2 சகோதரர்கள் உள்ளார்கள் என்றும் அவர்கள் பெயர் சித்தன் மற்றும் தங்கவேலு என்று கூறுகிறார்.

1-3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12:15</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.12.01 12:19:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.